செய்தி வெளியீடு எண்: 266.
நாள்: 28.5.2013.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம், திருமழிசையில் அடுக்குமாடி தொழில் வளாகங்களை அமைப்பது தொடர்பான பணிகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் ஆய்வுசெய்தார்கள்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (28.05.2013) பிற்பகல் 3மணி அளவில் திருவள்ளூர் மாவட்டம், திருமழிசையில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.ப. மோகன் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110யின் கீழ் அறிவித்த திட்டங்களின் அடிப்படையில் சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்து வருவதாலும், தொழிற் பேட்டைகள் துவங்க போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், தற்போதுள்ள தொழிற் பேட்டைகளை விரிவுபடுத்த போதிய இடம் இல்லாததாலும், சிறு தொழில் முனைவோர், தொழிற் கூடங்களை அமைக்க ரூ.20 கோடி செலவில் அடுக்குமாடி தொழில் வளாகங்கள் சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும் என அறிவித்ததற்க்கு இணங்க, திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை சிட்கோ தொழிற்பேட்டையில் சென்னை– பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி 1.45 ஏக்கர் நிலப்பரப்பில் இடம் தேர்வு செய்யப்பட்டு பூர்வாங்க பணிகள் துவங்கப்பட்டுள்ளதையும் 65 குறுந்தொழில் கூடங்கள், ஒவ்வொன்றும் சுமார் 850 சதுரஅடி பரப்பு அளவிலும் அடித்தளம் மற்றும் 3 தளங்களை கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகமாக அனைத்து தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதை ஆய்வுசெய்தார்கள். அப்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் துறையின் அரசு செயலாளர் திரு.கி. தனவேல் இ.ஆ.ப., தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.